வாருங்கள் எழுந்து கட்டுவோம்




Tamil Nadu Church of Christ
Preacher`s Meeting
at Batlagundu, Dindigul DT
15th and 16th December 2014

R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2015-2017
Posted at Batlagundu Post office on 10 th Feb. 2015

*Our Radio & TV Programs*
SriLanka Radio SW 25,41 Meter
on Saturday 5.30P.M &Tamilan TV
on Monday 6.00 A.M &
Saturday 6.15 P.M

**To**

If Undelivered Kindly Return to

*Our Postal Address:*
THE WORD OF CHRIST
POST BOX No. 5
BATLAGUNDU - 624202
S.INDIA

Owned and published by B.Arjunan
from 17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu -624 202
and printed by R.Sathiyamoorthy at Bharathi press,
14/13/24 Melamanthai Street,Batlagundu - 624 202.
Editor and Publisher B.Arjunan

தனிப்பிரதி ரூ.5/
ஆண்டு சந்தா ரூ.50/

THE WORD OF CHRIST

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

மரம் 15 | பிப்ரவரி 2015 | கனி 3



# கோலியாத்

# Goliath

"கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும் பரிபூரணமாக
வாசமாயிருப்பதாக" – கொலோசெயர் 3:16

ஆசிரியர்
B. அர்ஜுனன்



# World Evangelism Gospel Media



**Arjunan in Tamil on Tamilan TV & Radio:**
TV:Every Monday 6.00-6.15 a.m and Every Saturday 6.15-6.30 p.m
Radio:Every Saturday 5.30-5.45 pm on 25 and 45 meter band of Sri Lanka Radio.
*(TAMILNADU Contact Mobile: 9443558041)*

**Joshua & Ricky Gootam in Telugu on Subhavartha, Aradhana TV:**
Every Sunday 6.00 p.m and Saturday 8.00 a.m.
Every Wednesday 6.30 p.m and Thursday 2.30 p.m **on Rakshana TV:**
*(ANDRAPRADESH Contact Phone: 08842363722)*

**P.R.Swamy & Douglas in Tamil on Radio:**
Every Sunday to Wednesday at 5.30- 5.45 p.m on 25 and 45 meter band of Sri Lanka Radio. *(KARNADAKA Contact Mobile: 09844 70763)*

**P.K.Varghese in Malayalam on TV:**
Every Saturday 6.00-6.30 a.m on Jai Hindi Channel.
*(KERALA Contact Mobile: 9447035465)*

**Philemon & Kingsley in Tamil on Tamilan TV:**
Every Sunday 6.45-7.00 a.m and Every Friday 6.00-6.15 a.m.
*(TAMILNADU Contact Mobile: 9244214421)*

**Rajanayagam in Tamil on Tamilan TV:**
Every Sunday 10.00-10.30 p.m and Monday 7.00-7.15 a.m and Saturday 7.15-7.30 a.m.
*(TAMILNADU Contact Mobile: 98427 30382)*

**Sunny, Francis & Vinay David in Hindi on TV:**
Every Sunday and Tuesday 7.00-7.30 p.m on ShubhSandesh Channel.
*(NEW DELHI Contact Mobile: 09810896789)*


**THE WORD OF CHRIST**
Monthly Magazine

**Editor**
**B.ARJUNAN**

**Associate Editor**
**K.R.K.Ravi Asir**


அநேகரைப்போல, நாங்கள் தேவவசனத்தைக் கலப்பாய்ப் பேசாமல், துப்புரவாகவும், தேவனால் அருளப்பட்டபிரகாரமாகவும், கிறிஸ்துவுக்குள் தேவசந்நிதியில் பேசுகிறோம் - 2கொரி.2:17

**தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்**
**மாத இதழின் உள்ளே...**

ஆசிரியருரை
ஜெ.சி.சோட் அவர்களின் செய்தி
பெட்டி சோட் அவர்களின் செய்தி
ஜெர்ரிபேட்ஸ் அவர்களின் வேதபாடம்
கர்த்தருடைய ஊழியர்களாகிய
சகோ.பால்ராஜ்,
சகோ.ராஜாமணி,
அவர்களின் செய்தி
வாலிபர் பகுதி, பெண்கள் பகுதி
சிறுவர் பகுதி, வேத அறிவுப்போட்டி
மற்றும் பல...

"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15
"The Churches Of Christ Salute you" Romans 16:16


Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA




## வேத அறிவுப் போட்டி எண்: 174

### போட்டியாளர்கள் கவனத்திற்கு,

கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் விடையை வசன ஆதாரத்துடன் எழுதி, தபால் மூலம் இம்மாதம் 25-ம் தேதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியையும் எழுதி அனுப்பவும். விடை மார்ச் மாத இதழில்.


1. அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே எதை உண்டாக்கினார்?
2. காயீன் கர்த்தருடைய சந்நிதியை விட்டுப் புறப்பட்டு ஏதேனுக்குக் கிழக்கான எந்த தேசத்தில் குடியிருந்தான்?
3. விசுவாசிக்கிற உங்களுக்குள்ளே பெலன் செய்கிறது எது?
4. தன் மனைவியையும் தன் பிள்ளைகளையும் கழுதையின்மேல் ஏற்றிக்கொண்டு எகிப்து தேசத்துக்குத் திரும்பினவன் யார்?
5. நாங்கள் உங்களுக்கு மாதிரியாயிருக்க வேண்டுமென்றே அப்படிச் செய்தோம் என எழுதும் அப்போஸ்தலன் யார்?
6. எந்த நாளிலே ஆண்பிள்ளையினுடைய நுனித்தோலின் மாம்சம் விருத்தசேதனம் பண்ணப்படக்கடவது என்ற போதனை இருந்தது?
7. உத்தம விதவைகளாகிய விதவைகளைக் கனம்பண்ணவேண்டுமா?
8. மிரியாம் எத்தனை நாள் பாளையத்துக்குப் புறம்பே விலக்கப்பட்டிருந்தாள்?
9. பவுலின் விலங்கைக்குறித்து வெட்கப்படாதிருந்தவன் யார்?
10. பனித்துளிகள் புல்லின்மேல் இறங்குவதுபோல, எது இறங்கும்?

**அன்பு மொழிகள்**

- ஆத்மாவின் அழகுதான் 'அன்பு' – அகஸ்டீன்
- அறிவு மௌனத்தை கற்றுத்தரும் 'அன்பு' பேச கற்றுத் தரும் – ரிக்டர்
- 'அன்பு'க்கு இழப்பே கிடையாது – இர்வின்
- 'அன்பு' கொண்ட நெஞ்சம் எப்போதும் இளமையானது – டேவிஸ்யூம்

பரிசுத்த வேதம்
"அன்பில்லாதவன் தேவனை அறியான்; தேவன் அன்பாகவே இருக்கிறார்"
என போதிக்கிறது (1யோவான் 4:8)

- இவனுடைய சொந்த ஊர் காத் - 1சாமு.17:4
- பெலிஸ்தரின் பாளையத்தை சார்ந்தவன் - 1சாமு.17:3
- தன் சிறுவயது முதல் யுத்தவீரன் - 1சாமு.17:33
- அவனுடைய கவசத்தின் எடை ஐயாயிரம் சேக்கல் - 1சாமு.17:5
- தாவீது ஒரு கவணினாலும் ஒரு கல்லினாலும் கோலியாத்தை மேற்கொண்டான் - 1சாமு.17:50
- கர்த்தர் பட்டயத்தினாலும் ஈட்டியினாலும் ரட்சிக்கிறவர் அல்ல என்பதை தாவீது உணர்த்தினான் - 1சாமு.17:47
- தாவீதை கோலியாத் சபித்தான் - 1சாமு.17:43



சிறுவர் பகுதி

# இனிப் பாவஞ்செய்யாதே

## Sin No More

*வேதபகுதி: யோவான்8:1-11*



**வா** தம்பி வா, நல்லா படிப்பேனு நினைச்சா நீ இப்படி ரொம்ப கெட்ட பயலா போயிட்டேயே. இன்றைக்கு நான் உனக்காகவே ஒரு சம்பவத்தைச் சொல்லப்போறேன். மற்றவங்களும் நான் சொல்றத கவனியுங்க.

நமது ஆண்டவர் இயேசு கிறிஸ்து ஒலிவமலையிலே போய் இராத்தங்குவாரு பகலிலே தேவாலயத்தில் வந்து உபதேசம் பண்ணுவாரு. அப்படி ஒரு தேவாலயத்திற்கு வந்தவுடன் வேதபாரகரும் பரிசேயரும் ஆண்டவரை சோதிக்கும்படி பாவியாகிய ஒரு பெண்ணை கொண்டு வந்து இயேசுவுக்கு முன்பாக நிறுத்தி, போதகரே இந்த பெண் ஒரு பாவி, கையும் களவுமாக பிடிக்கப்பட்டாள் இப்படிப்பட்டவளை மோசேயின் பிரமாணத்தின்படி கல்லெறிந்து கொல்லவேண்டும் நீர் என்ன சொல்லுகிறீர் என்று கேட்டார்கள். அப்பொழுது அவர் தரையில் எழுதிக்கொண்டிருந்தார். அவர்கள் ஓயாமல் இதைக் குறித்து அவரிடம் கேட்டுக்கொண்டேயிருந்தார்கள்.

அதற்கு ஆண்டவர் என்ன சொன்னார் தெரியுமா? உங்களில் பாவமில்லாதவன் இவள்மேல் முதலாவது கல்லெறியக்கடவன் என்று சொன்னாரு அவ்வளவுதான் எல்லோரும் பயந்துபோய் ஒருவர்கூட இல்லாமல் எல்லோரும் போய்விட்டார்கள். இயேசு அந்தப் பெண்ணை தவிர வேறொருவரையும் காணாமல் நானும் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறதில்லை. நீ போ, இனிப் பாவஞ்செய்யாதே என்றார்.

அன்பான தம்பி தங்கைகளே நாமும் கூட இப்படித்தான் மற்றவர்கள் செய்கிற தவறையே பார்த்து குற்றப்படுத்துவோம். நாம் செய்கிற தவறை நாம் யோசிக்கிறதில்லை அதைக் குறித்து எவ்வித அக்கரையும் கொள்கிறதில்லை. வீட்டில் அம்மா மறைத்து வைக்கின்ற காசுகளை எடுத்துக்கொண்டு ஏதாவது வாங்கி தின்றுவிட்டு கேட்டால் அம்மா நான் எடுக்கவில்லை அவள் தான் எடுத்தாள் என்று தங்கைக்கு அடி வாங்கிக் கொடுப்பது. இப்படித்தான் வேதபாரகரும் தீர்ப்பு செய்தார்கள். அன்பான பிள்ளைகளே, இனிமேலாவது இந்த புதுவருடத்தில் இருந்து தவறு செய்யாம, மற்றவர்களை குற்றப்படுத்தாம இருங்க. நாங்க உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

மனப்பாட வசனம்: "மற்றவர்களை குற்றவாளியாகத் தீர்க்கிறவனே, நீ யாரானாலும் சரி போக்குச்சொல்ல உனக்கு இடமில்லை; நீ குற்றமாகத் தீர்க்கிறவைகள் எவைகளோ, அவைகளை நீயே செய்கிறபடியால், நீ மற்றவர்களைக் குறித்துச் சொல்லுகிற தீர்ப்பினாலே உன்னைத்தானே குற்றவாளியாகத்தீர்க்கிறாய்" (ரோமர்2:1).



தி வேர்ட் ஆப் கிறைஸ்ட்
THE WORD OF CHRIST
புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்
மரம் - 15 பிப்ரவரி-2015 கனி - 3

ஆசிரியருரை

# கர்த்தருடைய வழி

## The Lord`s Way




**உ**லகத்தில் அநேக வழிகள் இருக்கிறது. ஆனால் கர்த்தருடைய வழி செம்மையானவைகள். இவ்வழியைக் குறித்து இந்நாளில் நாம் தியானிப்போம். "கர்த்தருடைய வழிகள் செம்மையானவைகள், நீதிமான்கள் அவைகளில் நடப்பார்கள்; பாதகரோவென்றால் அவைகளில் இடறிவிழுவார்கள்" என்று ஓசியா தீர்க்கன் சொல்லுகிறான் (ஓசி.14:9). ஆம், அன்பானவர்களே கர்த்தருடைய வழிகள் செம்மையானவைகள். அந்த வழியாய் செல்லுகிறவர்களுக்கு நம்பிக்கையுண்டு. அவர்கள் திசைகெட்டுப்போவதில்லை. அவர்களை வழிநடத்துகிற கர்த்தர் வல்லவர். அவர்கள் சோர்ந்துபோவதில்லை. அநுதினமும் கர்த்தரால் போஷிக்கப்படுவார்கள். துன்மார்க்கர் அந்தவழியில் இருப்பதில்லை. நீதிமான்களோ அந்தவழியில் நடப்பார்கள். துன்மார்க்கர் அந்தவழியாய் போகலாம் என்று முயற்சித்தாலும் அவர்களால் கூடாமற்போகும். இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கும் நண்பரே, நீங்கள் எந்த வழியில் இருக்கிறீர்கள். உலக வழியிலா அல்லது கர்த்தருடைய வழியிலா?

ஏரேமியா புத்தகத்தில் வாசிக்கிறோம்; "வழிகளிலே நின்று, பூர்வ பாதைகள் எவையென்று கேட்டு விசாரித்து, நல்ல வழி எங்கே என்று பார்த்து, அதிலே நடவுங்கள்; அப்பொழுது உங்கள் ஆத்துமாவுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார்; அவர்களோ, நாங்கள் அதிலே நடக்கமாட்டோம் என்கிறார்கள்" (எரே.6:16). எல்லோரும் போகிறார்கள் ஆகையால் நானும் அந்தவழியே போகிறேன் என்று சொல்லி கோடிக்கணக்கான ஜனங்கள் கூட்டம் நிறைந்த வழியை தெரிந்துகொள்கிறார்கள். அந்தவழியே போனால் நம்முடைய ஆத்துமா இரட்சிக்கப்படுமா? என்று அவர்கள் கடுகளவும் சிந்திப்பதில்லை. அன்பு சகோதரனே, சகோதரியே நீ எந்த வழியை தெரிந்துகொண்டுள்ளாய்? ஜீவனுள்ள வழி ஒன்று உண்டு. அந்த வழியைக்குறித்து பரிசுத்த வேதாகமம் பேசுகிறது. அது ஜீவனுக்குப்போகிற வாசல், அது கர்த்தருடைய வழியாக இருக்கிறது. அவ்வழியை கர்த்தர் ஏற்படுத்தியிருக்கிறார். ஆகையால் பூர்வ பாதைகள் எவையென்று கேட்டு விசாரித்து நல்ல வழி எங்கே என்று பார்த்து அதிலே நடக்க பிரயாசப்படுங்கள். அப்பொழுது உங்களுடைய ஆத்துமாவுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும்.

என்னுடைய உறவினர் வழியில் போகிறேன் என்று அவர்களைப் பிரியப்படுத்த நீங்கள் போவீர்களானால், அவர்களும் ஏமாற்றப்படுவார்கள் நீங்களும் ஏமாற்றப்படுவீர்கள். சற்று நின்று நிதானித்து நல் வழி எங்கே என்று கேட்டு, விசாரித்து பூர்வ பாதைகளை தெரிந்துகொள்ளுங்கள். மலைப்பிரதேசங்களில் அநேக பாதைகள் போகும். எல்லா பாதைகளும் பார்ப்பதற்கு நன்றாகத்தானிருக்கும். ஆனால் ஒரு வழி மட்டுமே நாம் செல்லக்கூடிய மலைதேசத்திற்கு நம்மை கொண்டு செல்லும். மற்ற பாதைகள் காட்டிற்குள் வழிநடத்திவிடும். அங்கு நம்முடைய நிலைமை என்னவாகும் என்பதை சற்று யோசித்துப்பாருங்கள். அதைப்போல நீங்கள் ஜீவனுள்ள வழியை விட்டு பாதாளத்தை நோக்கிப் போகும் வழியை தெரிந்துகொண்டு போய்விடாதீர்கள். தாவீது அரசனைப்போல கர்த்தரைநோக்கி வேண்டுங்கள்; "கர்த்தாவே, உமது வழியை எனக்குப் போதித்து, என் எதிராளிகளினிமித்தம் செவ்வையான பாதையில் என்னை நடத்தும்" என்று ஜெபியுங்கள் (சங்.27:11). கர்த்தர் உங்களை அவருடைய வழியில் நடத்த சித்தமுள்ளவராயிருக்கிறார். ஆடு மேய்ப்பனாயிருந்த தாவீதை தம்முடைய வழியே நடத்தி அரசனாக்கினார். ஆகையால் தாவீது "உமது கட்டளைகளால் உணர்வடைந்தேன், ஆதலால் எல்லாப் பொய்வழிகளையும் வெறுக்கிறேன்" என்கிறார் (சங்.119:104). உண்மை என்று ஒன்று இருந்தால் அதற்கு மாறாக பொய்யானவைகள் பல இருக்கிறதை நாம் அறிகிறோம். அதைப்போல கர்த்தருடைய வழி என்று ஒன்று இருக்கிறது. அதற்கு எதிராக பிசாசினால் பொய்யான பல வழி அவனால் உருவாக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் இதை அறிந்த தாவீது ராஜா உமது கட்டளைகளால் உணர்வடைந்தேன். எல்லா பொய் வழிகளையும் வெறுக்கிறேன் என்கிறான். கர்த்தருடைய கட்டளைகளை வைத்து நாம் பொய்யானவைகளை அடையாளம் கண்டுகொள்ளலாம். ஆகையால் அன்பான தேவ ஜனமே, நீங்கள் கர்த்தருடைய வழியை தெரிந்துகொள்ளுங்கள். அவைகள் செம்மையானவைகளாயிருக்கிறது.

இயேசு சொல்கிறார்; "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" என்றார் (யோவா.14:6). அவரே வழியாகவும் சத்தியமாகவும் ஜீவனாகவும் இருக்கிறார். உலகத்தில் ஒரே வழியுண்டு அது கர்த்தருடைய வழியாகயிருக்கிறது. கர்த்தரே அந்த வழியாகவுமிருக்கிறார். அவர் சத்தியம் நிறைந்தவர். ஜீவனுள்ளவர் என காண்கிறோம். இவ்வழியே சென்றால் உள்ளும் புறம்பும் சென்று மேய்ச்சலைக் கண்டைவீர்கள். உங்களுடைய ஆத்துமா செழிக்கும். "நானே வாசல், என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால், அவன் இரட்சிக்கப்படுவான், அவன் உள்ளும் புறம்பும் சென்று மேய்ச்சலைக்கண்டைவான்" என்கிறார் (யோவா.10:9). நீங்கள் செல்லும் வாசல் இயேசுவின் வாசலாக இருக்கிறதா? அப்படியில்லை என்றால் இன்றே உங்களுடைய வழியை மறு ஆய்வு செய்யுங்கள். இல்லையேல் உங்களுடைய பிரயாசம் எல்லாம் வீணாய்போய்விடும். எல்லோரும் போகிறார்களே அவர்களுக்கு வருவது எனக்கும் வரட்டும் என்று அநேகர் சென்ற வழியே போய்கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட வழி மிகவும் விசாலமாகவும் இருக்கிறது. ஆனால் ஜீவனுக்குப்போகிற வாசல், வழி இடுக்கமாக இருப்பதாக நாம் வேதத்தில் படிக்கிறோம். "ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது; அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்" (மத்.7:14). இந்த



நடப்புச் செய்திகள்

## உலகத்திலே பெரிய பைபிள்



- உலகத்திலேயே பெரிய பைபிள் புத்தகம் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் உள்ளது
- புத்தகத்தின் நீளம் : 1மீட்டர்
- உயரம் : 221/2 செ.மீ
- பருமன் : 821/2 செ.மீ
- எடை : 1/2 டன்
- மொத்த பக்கங்கள் : 8,044
- உலகிலேயே அதிக மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்ட புத்தகம் பைபிள் தான். பைபிள் 2426 மொழிகளில் அச்சிடப்பட்டுள்ளது.

- M.Rajamani

தெரிந்துகொள்வோம்

## செழிப்பான பூமியின் வடக்கு மற்றும் கிழக்கு பகுதியில் மூன்று தேசங்கள்
## 1. ஆர்மீனியா 2. மேதியா 3. பெர்சியா

- K.R.K.Ravi Asir
Associate Editor

*1. ஆர்மீனியா:* வடக்கு அசீரியாவின் பகுதியில் கருங்கடலுக்கு தென்கிழக்கு பகுதியில் அமைந்துள்ள உயர்ந்த பீடபூமி மற்றும் மலை பகுதியாக இது இருக்கிறது. அசீரிய தேசத்தை சேர்ந்த கல் வெட்டுக்கள் இத் தேசத்தை குறித்து "உராட்டு" என்று குறிப்பிடுகின்றன (அரராத் மலை) நோவாவும் அவனுடைய குமாரரும் இங்கே தான் அவர்களுடைய பேழையை விட்டுச் சென்றார்கள். அசீரியா ராஜாவாகிய சனகெரிப்பின் குமாரர்கள் எருசலேம் நகரத்தை முற்றுகையிட்டார்கள். நினிவே பட்டணத்தில் சனகெரிப்பின் புத்திரராகிய அத்ரமலேக்கும், சரேத் சேரும் சனகெரிப்பை பட்டயத்தினால் வெட்டிப்போட்டு ஆரராத் தேசத்திற்குத் தப்பி ஓடிப் போனார்கள் (2இரா.19:37).

*2. மேதியா:* மேதியர்கள் பாபிலோனுக்கு வடகிழக்கு பகுதியிலே காஸ்பியன் கடலுக்கும், சாக்ரோஸ் மலைத் தொடருக்கும் இடையே வசித்தார்கள். வேதவாக்கியத்திலே மேதியர்களுக்கு முன்னோடியாக யாப்பேத்தின் ஒரு குமாரனாகிய மார்த்தாய் என்பவன் காணப்படுகிறான் (ஆதி.10:2). இவன் மேதியருடைய முற்பிதாவாக எண்ணப்படுகிறான்.

*3. பெர்சியா:* மேதியாவுக்கு தென்கிழக்கு பகுதியிலும் ஈரானைச் சேர்ந்த பீடபூமியின் மேற்பகுதியிலுள்ள பெர்சியன் வளைகுடாவுக்கு வடபகுதியிலும் பெர்சியர்களுடைய தேசம் வரலாற்று ரீதியாக முதலாவது காணப்பட்டது. கோரேஸ் இராஜாவினுடைய ஆட்சியின் கீழ் அண்டை தேசத்தாரான மேதியர் லீதியர்களை வெற்றி கொண்டு (லீதியர்கள் ஆசியா மைனர் பகுதியை சேர்ந்தவர்கள்) பாபிலோனிய சாம்ராஜ்யத்தையும் முறியடித்து பெர்சியா ஒரு உலகளாவிய சாம்ராஜ்யமாக மாறியது. மேம்பிசஸ் என்பவருடைய தலைமையின் கீழ் இந்த பெர்சியா தேசமானது எகிப்தை மட்டுப்படுத்தியது ஆனால் கிரேக்க தேசமோ வெற்றிகரமாக எதிர்த்து நின்றது. முடிவாக மக்கதோனியாவை சேர்ந்த அலெக்சாண்டர் பெர்சிய சாம்ராஜ்யத்தை மேற்கொண்டார்.

## கிறிஸ்துவின் வசனம் வானொலி மூலமாக கிடைத்த ஆத்துமாக்கள்...



இயேசு ஆண்டவருக்கு ஸ்தோத்திரம். கர்த்தர் நல்லவர். இயேசு ஆண்டவர் இந்த உலகத்தில் எத்தனை துன்பம் துயரங்கள் அநுபவித்து நமக்காக சிலுவை சுமந்து பாடுபட்டவர். வாய்விட்டு சொல்ல முடியாத அளவுக்கு பாடுபட்டார். அவர் நல்லவர் சர்வ வல்லவர்.

இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பு சகோதர சகோதரிக்கு வாழ்த்துக்கள். மகாராஷ்ட்ரா மாநிலம் எம். மாயாண்டி, தனலட்சுமி மற்றும் மகன் பிரபு, மகள் கார்த்திகா எழுதும் சிறப்பு மலர். வானொலி மூலம் கேட்டபின்பு தான் தெரியும் உண்மை கடவுள் இயேசு என்று அதற்கு முன்பு தெரியாது. அவருக்கு கீழ்ப்படிந்து வருகிறோம். இயேசு ஆண்டவர் எங்களை மிகவும் அருமையாக நேசிக்கிறார் ஸ்தோத்திரம். நானும் என் மனைவியும் இயேசுவை அறியாத பொழுது எத்தனை சோதனை வேதனை நோய் மருத்துவ செலவு நஷ்டம், கஷ்டம், நிம்மதி இன்மை, என்னை சாத்தான் குடி, குடி என குடிக்கவைத்து சோதனை செய்தான். நானும் என் மனைவியும் தற்கொலை செய்ய முடிவு செய்தோம். காரணம் கடன் தொல்லை.

காலை நேரம் ஃபிபா வானொலி கேட்போம் மாலை பி.ஆர். சாமி அன்பு சகோதரர் பா. அர்ஜுனன் அவர்களுடைய செய்தியை கேட்டு மனந்திரும்பினோம். தேவகுமாரனாகிய இயேசுகிறிஸ்துவுக்கு கீழ்ப்படிந்து ஜெபித்து வந்தோம். பின்பு பீடி, சிகரெட், வெற்றிலை பாக்கு, பட்டை சாராயம் எல்லாம் படிப்படியாக குறைந்தது. போதைப்பழக்கம் குறைய ஆரம்பித்தது, முன்பு தற்கொலை செய்ய முடிவு செய்தோம். கணவன் மனைவியிடம் சண்டை அடி தடி புயல் வெள்ளம், சுனாமி, இடி மின்னல் இப்படி வந்தது குடும்பம் சிதறும் நிலை வந்தது வீட்டை 10ஆயிரம் ரூபாய்க்கு விற்பனை செய்ய முடிவுசெய்தோம். வீட்டை யாரும் விலைக்கு வாங்க வரவில்லை. போதைபழக்கத்தை குறைத்தேன், அடி தடி சண்டைக்கு முற்றுப்புள்ளி வைத்தேன். கடன் அடைய ஜெபித்தோம் கர்த்தர் அற்புதமாக அனைத்திலிருந்தும் எங்களை விடுவித்தார்.

வானொலி நிகழ்ச்சிகளை தெரியாதவருக்கும் அறிமுகப்படுத்தி வருகிறோம். எங்களைப்போன்றோர், உலக மக்கள் யாவரும் இயேசுவை ஏற்றுக்கொண்டால் வாழ்க்கையில் நிம்மதி சந்தோஷம் காணமுடியும். யானையின் பலம் தும்பிக்கையில் மனிதர்களின் பலம் நம்பிக்கையில். இலங்கை ஆசிய சேவை சனிக்கிழமை வத்தலக்குண்டு பா. அர்ஜுனன் ஆசிரியர் கொடுக்கும் தேவ வசனத்தை கேட்டு எனது மூளையில் பதித்து வைத்துக்கொள்வேன். என்ன பாவம் செய்தோம், யாரைத்திட்டினோம் என இருவரும் சிந்திப்போம்.எங்களைப்போன்றோர் பல கோடி குடும்பங்கள் இயேசுஆண்டவரின் இரட்சிப்பு இல்லாமல் திண்டாடுகிறார்கள் அவர்கள் எல்லோரும் வானொலி நிகழ்ச்சி கேட்டு பயன் பெறலாம் என்பதை தெரிவிக்கிறேன்.

***M.Mayandi***



வழி இடுக்கமான வழியாக இருக்கிறது. ஆகையால் இதில் போவது கஷ்டம் என்று அநேகர் இந்த வழியை தெரிந்துகொள்வதில்லை. ஆனால், விசாலமானவழியை அநேகர் தேர்வு செய்கின்றனர். அது பாதாளத்திற்குப்போகும் வழியாக இருக்கிறது. இடுக்கமும் நெருக்கமுமான வழி ஜீவனுக்குப்போகிற வழியாக இருக்கிறது. அதில் பயணிக்கிறவர்கள் சிலர் என்று காண்கிறோம். அன்பானவர்களே, நீங்கள் உங்களுடைய வழியை மறு ஆய்வு செய்யுங்கள். சரியான வழியை தெரிந்துகொள்ளுங்கள். இடுக்கமான வழியில் உட்பிரவேசிக்க பிரயாசப்படுங்கள். அந்த வழியில் சமாதானமும், சந்தோஷமும், நீடிய தயவும் உண்டு, மேலும் நீங்கள் வேண்டிக்கொள்ளுகிறவைகளுக்கு பதில் கிடைக்கும். அந்த வழி நம்மை நித்தியத்திற்கு நேரே வழி நடத்தும்.

மேலும், "சகோதரரே, நாம் பரிசுத்தஸ்தலத்தில் பிரவேசிப்பதற்கு இயேசுவானவர் தமது மாம்சமாகிய திரையின் வழியாய்ப் புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை நமக்கு உண்டுபண்ணினபடியால், அந்த மார்க்கத்தின்வழியாய்ப் பிரவேசிப்பதற்கு அவருடைய இரத்தத்தினாலே நமக்குத் தைரியம் உண்டாயிருக்கிறது..." (எபி.10:19,20). கர்த்தருடைய வழியே போகிறவர்களுக்கு முழு தைரியம் உண்டாயிருக்கிறது. எப்படியென்றால்; கர்த்தர் தம்முடைய இரத்தத்தை சிந்தி அந்த வழியை ஏற்படுத்தியிருக்கிறார். அவருடைய இரத்தத்தினால் கழுவப்பட்டவர்கள் அந்த ஜீவனுள்ள மார்க்கத்தில் நடப்பதற்கு தைரியமுள்ளவர்களா யிருக்கிறார்கள். ஆசரிப்புக்கூடாரத்துக்குள்ளாக வருடந்தோறும் இரத்தத்தோடு ஆசாரியன் பிரவேசிப்பான். ஜனங்களுக்காகவும் தனக்காகவும் பாவநிவர்த்திசெய்யும் பொருட்டு உள்ளே பிரவேசிப்பான். நம்முடைய ஆண்டவர் இயேசுகிறிஸ்து நாம் பரிசுத்த ஸ்தலத்தில் அதாவது பரலோகத்தில் பிரவேசிப்பதற்கு தமது மரணத்தின் மூலம் புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை நமக்கு ஏற்படுத்தினார். இரத்தம் சிந்துதல் இல்லாமல் பாவ மன்னிப்பு இல்லை. ஆகையால் ஆண்டவர் தம்முடைய இரத்தத்தை சிந்தி யாவருக்கும் நித்திய மீட்பை உண்டுபண்ணினார்.

இந்த மார்க்கத்தை அறிந்துகொள்ளுங்கள். இந்த மார்க்கம் மாம்சமான யாவருக்கும் உண்டாக்கப்பட்ட புதிதும் ஜீவனுமுள்ள மார்க்கம். உலகத்தில் தோன்றின எல்லாம் மார்க்கங்களும் மண்ணோடு மண்ணாய் போய்விட்டது. இன்னும் சில மார்க்கங்கள் மறையும் நேரம் நெருங்கிக்கொண்டிருக்கிறது. ஆனால் கர்த்தருடைய மார்க்கம் அதாவது அவருடைய வழி இன்றும் என்றும் அழியாமல் ஜீவனுள்ள மார்க்கமாகவே இருக்கிறது. அப்போஸ்தலனாகிய பவுல் அவருடைய மார்க்கத்தை அறிந்த அப்பொல்லோவுக்கு, ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாவும் மேலும் விவரித்துக் காண்பிக்கிறதை நாம் அப்போஸ்தல நடபடிகள் புத்தகத்தில் படிக்கிறோம். "அவன் கர்த்தருடைய மார்க்கத்திலே உபதேசிக்கப்பட்டு யோவான் கொடுத்த ஸ்நானத்தை மாத்திரம் அறிந்தவனாயிருந்து, ஆவியில் அனலுள்ளவனாய்க் கர்த்தருக்கு அடுத்தவைகளைத் திட்டமாய்ப் போதகம்பண்ணிக்கொண்டுவந்தான். அவன் ஜெபஆலயத்தில் தைரியமாய்ப் பேசத்தொடங்கினபோது, ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் அவன் பேசுகிறதைக் கேட்டு, அவனைச் சேர்த்துக்கொண்டு, தேவனுடைய மார்க்கத்தை அதிக திட்டமாய் அவனுக்கு விவரித்துக் காண்பித்தார்கள்" (அப்.18:25,26). இன்றைக்கும் அநேகர் கிறிஸ்தவத்தை அறிந்திருக்கிறார்கள் இந்த அப்பொல்லோவைப்போல, ஆனால் அவர்கள் கர்த்தருடைய வழியில் தாங்கள் செய்யவேண்டிய அல்லது நிறைவேற்றவேண்டிய

அநேக கட்டளைகளை நிறைவேற்றாமலே இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் வேத வசனங்களை சற்று உற்று கவனிக்கவேண்டியவர்களாக இருக்கிறார்கள். அப்பொழுதே அவர்கள் கர்த்தருடைய முழு கட்டளைகளையும் நிறைவேற்ற முடியும்.

அதைப்போல ஏசாயா தீர்க்கதரிசியின் புத்தகத்தை வாசித்துக்கொண்டு ரதத்தில் பயணித்த மந்திரியை பிலிப்பு சந்தித்து நீர் வாசிக்கிறவைகளின் கருத்து உமக்குத் தெரியுமா என்று கேட்டபோது, ஒருவன் அறிவிக்காவிட்டால் அது எப்படி எனக்குத் தெரியும் என்றான். பின்பு பிலிப்பு பேசத்தொடங்கி இந்த வேதவாக்கியத்தை முன்னிட்டு இயேசுவைக்குறித்து அவனுக்குப் பிரசங்கித்தான். பின்பு அவன் கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டான். அதனால் அவன் கர்த்தருடைய வழியை தெரிந்துகொண்டான். இன்றைக்கு வேதாகமத்தை வாசிக்கிறார்கள். ஆனால் அதன் கருத்து அநேகருக்கு தெரிவதில்லை. ஏதோ ஒரு புத்தகத்தை படிப்பதைப்போல படித்துக் கொண்டிருக்கிறார்கள் அல்லது கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்துவிட்டோம் என்று சொல்லி படித்துக்கொண்டிருக்கிறார்கள். உண்மையிலே வானத்திற்கும் பூமிக்கும் ஆண்டவர் ஒருவரே. அவரே இயேசு. அவர் நம்முடைய பாவங்களை நீக்கும்படி சிலுவையில் தன்னை ஒப்புக்கொடுத்தார். அவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பு உண்டாயிருக்கிறது. அவர் ஜீவனுள்ள ஒரு மார்க்கத்தை ஏற்படுத்தியுள்ளார். இப்படிப்பட்ட அநேக சத்தியங்களை அநேகர் அறியாதவர்களாகவே இருக்கிறார்கள்.

உலக வழிகளைப் பாராது "இடுக்கமான வாசல்வழியாய் உட்பிரவேசியுங்கள்; கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும், வழி விசாலமுமாயிருக்கிறது; அதின் வழியாய் பிரவேசிக்கிறவர்கள் அநேகர்" என்று மத்.7:13-ல் படிக்கிறோம். பொதுவாக ஜனங்கள் கூட்டத்தையே அதிகமாக விரும்புகிறார்கள். கூட்டம் அதிமாக இருந்தால் அவர்களுக்கு நம்பிக்கை வந்துவிடுகிறது. ஆகையால் அந்த கூட்டத்தோடு கூட்டமாக இவர்களும் கலந்துகொள்ள பிரயாசப்படுகிறார்கள். எல்லாரும் போகிறார்கள் ஆகையால் நாங்களும் போகிறோம் என்று சொல்லக்கூடிய அநேகரை நாம் அக்கூட்டங்களில் காணமுடியும். இப்படிப்பட்டவர்கள் கூட்டத்தைப்பார்த்து ஏமாற்றமடையக் கூடியவர்கள். கேட்டுக்குப்போகிற வாசல் இப்படித்தானிருக்கிறது. அதில் பிரவேசிக்கிறவர்கள் அநேகர் என வேதம் சொல்லுகிறது. உங்களுடைய தேர்வு கர்த்தருடைய வழியாய் இருக்கட்டும்.

**இயேசுவையல்லாது நாம் இரட்சிக்கப்பட வேறு வழி உண்டா?**

பேதுரு சொல்லுகிறார்; "அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும் மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை" (அப்.4:12). உலகத்தில் பிதாவாகிய தேவன் நமக்கு அறிமுகப்படுத்தியது அவருடைய நேச குமாரனாகிய இயேசு ஒருவரையே அவரே உலகத்தின் இரட்சகர். உலகத்தின் பாவத்தைப்போக்கும் தேவ ஆட்டுக்குட்டி. அவர் இல்லாமல் இரட்சிப்பு மனிதனுக்கு வேறுவழியில் இல்லை. அவரே வழியாகவும் சத்தியமாகவும் ஜீவனாகவும் இருக்கிறார். பவுல் சொல்லும்போது; "இப்படியிருக்க முக்கியமான வரங்களை நாடுங்கள்; இன்னும் அதிக மேன்மையான வழியையும் உங்களுக்குக் காண்பிக்கிறேன்" (1கொரி.12:31).



நாம் எல்லாரும் கிறிஸ்துவுக்கு சொந்தம், நாம் பிரிக்கப்பட முடியாது (1கொரிந்.1:13).

2. ஒரே கர்த்தர் (அதிகாரம்) இருக்கிறபடியால், அவசியத்தின் பொருட்டு ஒரே சபைதான் இருக்கவேண்டும். சபையில் உள்ள யாவரும் ஒரே போதனையையும் போதிக்க வேண்டும். அந்த ஒரே அதிகாரத்திற்கு தன்னை ஒப்புக்கொடுக்க மனிதர்கள் மறுக்கும்போது பிரிவினை வருகிறது.

**6. ஒரே ஒரு விசுவாசமே உண்டு.**

நவீன உலகம் இதை ஒரு தனிமனிதன் இயேசுவை தனிப்பட்ட வகையில் தேவனுடைய குமாரனென்று விசுவாசிப்பது என்கிறார்கள். அந்த ஒரே விசுவாசத்தில் நாம் ஒன்றுபட்டிருக்கிறோம். ஆனால் குணரீதியாக நாம் எல்லாவற்றிலும் மாறுபட்டிருக்கலாம் (பிரிந்து) என்கின்றனர்.

நாம் நம்மை ஒப்புக்கொடுக்க வேண்டிய உபதேச சட்டங்கள் அனைத்தையும் ஒன்றாக சேர்த்தே புதிய ஏற்பாடு ஒரே விசுவாசம் என்கிறது.

1. அப்.6:17-ல் பெருங் கூட்டமான பூசாரிகள் அந்த விசுவாசத்துக்குக் கீழ்ப்படிந்தார்கள்.

2. பரிசுத்தவான்களுக்கு ஒப்புக் கொடுக்கப்பட்ட அந்த ஒரே விசுவாசத்துக்காக போராட வேண்டுமென்று யூதா சொல்லுகிறார் (யூதா 3).

அப்போஸ்தலர் மற்றுமுள்ளோருக்கு தேவன் கொடுத்தது அந்த விசுவாசத்தின் ஒற்றுமைக்குள்ளாக சபையைக் கொண்டுவரத்தான் (அப்.4:11-13). இயேசுவானவர் தேவனுடைய குமாரன் என்று புரிந்து கொள்வதற்காக மட்டும் நமக்கு அவ்வளவு தேவைப்படாது.

ஒரே ஆவியானவராலே முழுமையாக வெளிப்படுத்தப்பட்ட கிறிஸ்துவின் சுவிசேஷத்துக்கு செவி சாய்த்தால்தான் ஒற்றுமையிருக்க முடியும்.

**7. ஒரே ஒரு ஞானஸ்நானமே உண்டு.**

நவீன உலகம் ஒரே ஞானஸ்நானம் என்பதற்கு புதிய விளக்கம் கொடுத்திருக்கிறது.

1.சிலருக்கு இது அற்புத வரங்களைக் கொடுக்கிற பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம்.

2. சிலருக்கு இது நம்மைக் கிறிஸ்தவனாக்குகிற ஆவியானவராலே நிகழ்கிற புதிய பிறப்பு.

3. முன்னமே நிகழ்ந்துவிட்ட அந்த புதிய பிறப்பின் அடையாளமாக தண்ணீரின் ஞானஸ்நானம் இருக்கிறது. இது பல வகைகளில் நடத்தப்படுகிறது.

4.இதில் குறைந்தது மூன்று ஞானஸ்நானம் அல்லது அதற்கு மேலும் இருக்கின்றன. ஆனால் பவுல் ஒரே ஞானஸ்நானமே உண்டு என்று சொல்கிறார்.

பெந்தெகொஸ்தே நாளில் நடந்ததுபோல பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் இப்போது கிடையாது. ஆவியினாலே ஏற்படுகிற புதிய பிறப்பு தண்ணீர் ஞானஸ்நானத்திலே இருக்கிறது (யோவான் 3).

இந்த ஒரே ஞானஸ்நானத்தின் மூலமாக ஒருவர் சரீரத்துக்குள் (சபைக்குள்) பிரவேசிக்க முடியும். நாம் யூதராயினும் கிரேக்கராயினும், அடிமையாயினும் சுயாதீனராயினும் எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டு எல்லாரும் ஒரே ஆவிக்குள்ளாகவே தாகந்தீர்க்கப்பட்டோம் (1கொரி.12:13).

1. அமைப்பிலே ஒன்று - பாவமன்னிப்புக்காக (அப்.2:38)

2. முறையில் ஒன்று - மூழ்குதல் அல்லது அடக்கம் பண்ணப்படுதல் (ரோம.6:4). கொலோ.2:12 ஞானஸ்நானத்தில் பல மாதிரிகள் கிடையாது.

# பாடம் -11 ஒற்றுமைக்கான தேவனுடைய அடித்தளம்

## God`s Platform for Unity

*- Jerry Bates*

**-மொழியாக்கம் சகோ.தானியேல், சென்னை**

-சென்ற மாதஇதழின் தொடர்ச்சி




**3. ஒரே ஒரு ஆவியுண்டு**

ஒரே ஆவியானவரே அந்த ஒரே சத்தியத்தை வெளிப்படுத்தினவர் (யோவா.16:13).

அவருடைய வேலை பரிபூரண வார்த்தையாகிய சுவிசேஷத்தை மனுக்குலத்திற்கு கொடுப்பதுதான். ஒரே ஆவியானவர் இருப்பதினாலே அவர் நமக்கு ஒரே விதமான போதனையையே அளிப்பார். அவர் தனக்குத்தானே முரண்படமாட்டார்.

1. ஆவியானவராலே நடத்தப்படுவதாக அநேகர் சொல்லுகிறார்கள்.

2. அநேக மதக் குழுக்கள் வேதத்தை பின்பற்றுவதாக உரிமை கோறுகிறார்கள். இருப்பினும் அவர்கள் எல்லாருக்கும் முரண்பட்ட நம்பிக்கைகள் உண்டு.

3. பலர் தங்களுக்கு இக்காலத்தில் ஆவியானருவடைய வெளிப்பாடு இருப்பதாகக் கூறுகிறார்கள். ஆனாலும் அவர்கள் ஒருவருக்கொருவர் முரண்படுகின்றனர்.

4. இந்த சூழலில் ஒற்றுமையாக வேலை செய்வது முடியாத ஒன்றாகும். இந்தப் பகுதியிலே பவுல் இதைத்தான் பேசுகிறார் என்று சொல்வது அறிவற்ற செயலாம்.

**4. ஒரே நம்பிக்கை உண்டு.**

நீங்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மகிமையை அடையும் பொருட்டு எங்கள் சுவிசேஷத்தினாலே அந்த இரட்சிப்புக்கு உங்களை அழைத்தார் (2தெச.2:14).

ஒரே நம்பிக்கையுண்டு. ஒரே அழைப்புண்டு அப்படியே ஒரே சுவிசேஷமுண்டு.

பொய்யுரையாத தேவன் ஆதிகால முதல் நித்திய ஜீவனைக் குறித்து வாக்குத்தத்தம்பண்ணினார் (தீத்து 1:2).

1. அது ஜீவனுள்ள நம்பிக்கை (1பேது.3:5)

2. அது நிலையானதும் உறுதியுமான நம்பிக்கை (எபி.6;19). நங்கூரம். இந்த நம்பிக்கையைக் குறித்த பார்வையை நாம் இழப்பதுதான் சச்சரவுகள் பல பிரிவினைகளுக்கான ஒரு காரணம். நாம் எங்கிருந்து வந்தோம் என்பதைப் பார்க்கவேண்டும். கொரிந்தியர்கள் தங்களை இரட்சிப்புக்குள் நடத்தியவர்களை திரும்பிப் பார்க்கிறார்கள். யூதனென்றும் கிரேக்கனென்றுமில்லை. அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை. ஆணென்றும் பெண்ணென்றுமில்லை. நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள் (கலா.3:28).

**5. ஒரே கர்த்தருண்டு.**

ஆகையினால் நீங்கள் சிலுவையிலறைந்த இந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினாரென்று இஸ்ரவேல் குடும்பத்தார் யாவரும் நிச்சயமாய் அறியக்கடவர்கள் (அப்.2:36).

எல்லா அதிகாரமும் தனக்கிருப்பதாக கிறிஸ்து சொன்னார். அவர் ஒருவருக்கே நாம் பக்தியுள்ளவர்களாயிருக்கவேண்டும்.

என்னை ஆண்டவரே ஆண்டவரே என்று சொல்லியும் நான் சொல்லுகிறபடி நீங்கள் செய்யாமற்போகிறதென்ன? (லூக்.6:46).


அந்த அதிகாரத்தை நாம் ஏற்றுக் கொள்ளவேண்டும்.



இப்படிப்பட்ட மேன்மையான வழிகளை மனிதன் நாடாமல். தனக்குத்தானே வழியை ஏற்படுத்திக்கொள்ளுகிறான். அந்த வழி அவனை இரட்சிப்பதில்லை. தேவன் நமக்கு ஒரு அற்புதமான திட்டத்தை ஏற்படுத்தியிருக்கிறார். பாவத்தில் விழுந்துபோன மனிதனை அவர் அப்படியே விட்டுவிடாமல். தம்முடைய குமாரனுடைய இரத்தத்தை கொண்டு பாவத்திலிருந்து மீட்டெடுக்கிறார். இது அவருடைய மாபெரும் இரட்சிப்பின் திட்டம் அல்லவா? இதை வேதாகமத்தின் துணைகொண்டு அறிந்துகொள்ளுகிறோம். நீங்கள் உங்களுடைய குடும்பத்தாரோடு இந்த வழி செல்ல பிரயாசப்படுங்கள். உங்களுடைய குடும்பத்தில் உள்ள ஒருவரும் விடுபட்டுப்போய்விடாதபடி பார்த்துக்கொள்ளுங்கள். கர்த்தருடைய வழிசென்று கணக்கில்லா ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளுங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

# கிறிஸ்தவம் எனக்கு என்ன செய்தது?

## What did Christianity do to me?



?

என்னை பாவத்திலிருந்து மீட்டது

என்னை பரிசுத்த மாக்கியது

என்னில் விசுவாசத்தை துவக்கியது

என்னை பெலப்படுத்தியது

எனக்கு ஞானத்தைக் கொடுத்தது

எனக்கு அறிவைப் போதித்தது

எனக்கு எல்லையில்லா சமாதானத்தைக் கொடுத்தது

எனக்கு இன்னும் என்னவேனுமோ அத்துனையும் கொடுத்தது.

**இதை நீ அறியாயோ மனமே!**

"ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால் அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்; என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது" (இயேசு) யோவான்15:15

# தேவைப்படாத பிரசங்கியார்கள்

## PREACHER NOT NEEDED

*J.C.Choate*



சபையில் தலைமைத்துவப் பொறுப்பில் உள்ள எல்லோருமே கர்த்தருடைய சரீரத்துக்கும் அதனுடைய பணிகளுக்கும் அவசியம் என்பதை நாம் புரிந்து கொண்டபோதிலும், இந்தப் பாடத்தில் நன்கு கற்றறிந்து தேர்ச்சிப்பெற்ற பிரசங்கியார்கள் இந்த பணிக்கு மிகவும் தேவைப்படுவதால் பிரசங்கியாரைப் பற்றி அதிக முக்கியத்துவம் கொடுத்து படிப்போம். இருந்த போதிலும் இந்த நேரத்தில் தேவைப்படாத சில பிரசங்கியார்களைப் பற்றி விவாதிக்கலாம்.

சமுதாயத்தினுடைய ஒவ்வொரு பகுதியிலும் ஒவ்வொரு வேலையிலும் எப்போதும் தகுதியற்ற சிலர் இருப்பார்கள். அவர்கள் நன்மையைவிட அதிக தீமைச்செய்கிறவர்கள். அவர்களில் சிலர் சூழ்நிலையைப் பயன்படுத்தி தங்களுடைய சுயநலத்திற்கு ஏற்றவைகளை வளர்த்துக் கொள்வார்கள். இதே விதமான சூழ்நிலை கர்த்தருடைய சபையிலும் உண்மையாகவே இருக்கிறது. சபையில் தேவைப்படாத விரும்பப்படாதவர்கள் சிலர் பிரசங்கிக்கும்படியாக கவரப்படுகிறார்கள். அவர்களுடைய நோக்கங்களாலும் வாழும் விதத்தாலும் தேவனுடைய வார்த்தையில் போதிக்கப்படுகிறவைகளோடு ஒத்துப்போக மனமில்லாத காரணத்தினாலும் அப்படியாகிறது.

அவர்கள் மனமாற்றம் அடையாமல் அல்லது கர்த்தருடைய சபையின் அங்கத்தினர்களாயிராமல் இருந்தால் சுவிஷேசத்தைப் பிரசங்கிக்க தகுதியற்றவர்கள் என்பதை சொல்லத் தேவையில்லை, மேலும் தேவைப்படாத அநேகரைப் பற்றி நாம் பார்ப்போம்.

1. வளர்ச்சியுற்ற எல்லாதரப்பினர் மத்தியிலும் பெண்கள் பிரசங்கியாராக இருக்க முடியாது. புதிய ஏற்பாட்டில் எந்த ஒரு இடத்திலும் பெண்கள் பிரசங்கிக்கும் பொறுப்பில் இருந்ததாக நீங்கள் படிக்கிறீர்களா? சில சந்தர்ப்பங்களிலே ஸ்தீரிகள் வளர்ந்த ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனியாகவோ, தனிப்பட்ட முறையிலோ போதித்து இருக்கிறார்கள். ஆண்களும், பெண்களும் கலந்த கூட்டத்தாருக்கு பொது இடங்களில் பிரசங்கித்தது எப்போதும் ஆண்கள் மட்டுமே. கிறிஸ்து உலகமெங்கும் சுவிஷேசத்தை எடுத்துச் செல்லும்படி அப்போஸ்தலருக்கு கட்டளையிட்டார் (எல்லோரும் ஆண்களே) (மாற். 16:15-16). பெண்களை சேர்க்காததால் கர்த்தர் அநீதி உள்ளவரா? இல்லை ஆண்களுக்கு செய்யும்படியான வேலைகள் கொடுக்கப்பட்டது போல பெண்களுக்கும் செய்யும்படியான வேலையும் கொடுக்கப்பட்டுள்ளது. கர்த்தருக்கு மனுஷனையும் மனுஷியையும் நன்றாகத் தெரியும் அவர்களுக்கு எது மிகவும் நல்லதென்று தெரியும். ஆகவே அதுவே



# உபதேசம் முக்கியமா?

## Is Doctrin Important?

*-K.Thangaraj*

சபையின் ஒற்றுமைக்கு உபதேசம் முக்கியமற்றது என்று உலகில் இருக்கின்ற மத வட்டாரங்களில் ஒரு சிலர் போதிக்கின்றனர். அப்படியாக, இன்றைய காலத்திலே, "பிரிவில் ஒற்றுமை" என்கின்ற ஒரு கருத்தை வழியுறுத்துவதற்காக பல கூட்டங்கள் எழும்பியிருக்கின்றன. இதைப் பின்பற்றுபவர்கள், வேதாகம உபதேசங்கள் "கிறிஸ்தவ ஒற்றுமை" தங்களுடைய எண்ணங்களுக்கு ஏற்றவாறு அமைந்திருக்க வேண்டுமென்று எண்ணுகிறார்கள். இருப்பினும், இப்படிப்பட்ட முயற்சிகள் தேவனுடைய பார்வையில் தவறானதாகவும், குற்றமுள்ளதாகவும் இருக்கின்றபடியால் இதை வேதாகமம் கண்டிக்கிறது (1கொரி.1:10-17; கலா.1:6-12; மாற்.7:6-9).

வேதாகமம் கிறிஸ்துவின் உபதேசத்தைப்பற்றி எதை கற்பிக்கிறது? முதலாவதாக, "உபதேசம்" என்கின்ற வார்த்தைக்கு "கற்றுக்கொடு" என்று பொருள்படுகிறது. மற்றும் இதற்கு சான்றாதாரம் வேதவசனத்தில் காணப்படுகிறது (1தீமோ.1:10-11) புதிய ஏற்பாட்டில் 21 முறை இந்த வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. மேலும் அப்போஸ்தலனாகிய பவுலின் நிருபங்களில் 15 முறை காணப்படுகின்றது.

இரண்டாவதாக, வேதாகம மாணவர்கள் தேவன் வலியுறுத்துகின்ற வல்லமையான உபதேசம் அதிக முக்கியத்துவம் பெற்றிருக்கின்றது என்பதை அறிந்துகொள்கின்றார்கள். (2யோவா.9-11) அதே நேரத்தில் சிலர் வல்லமையான உபதேசத்தைக் கற்றுக்கொடுக்கிறார்கள் என்று வேதம் கூறுகிறது (2தீமோ.4:1-4). மனுஷருடைய கற்பனைகளையும், கோட்பாடுகளையும் உபதேசிக்கின்றவர் களைப்பற்றி இயேசு கிறிஸ்து கூறுகிறார் (மத்.15:9).

எபேசு பட்டணத்து சபையார் உபதேசத்தை விட்டு விலகிப்போனார்கள் என்று சுட்டிக்காட்டி பவுல் எச்சரிக்கிறார் (எபே.4:14). கொலோசெயருக்கு எழுதின நிருபத்தில் மனுஷருடைய கற்பனைகளையும் போதனைகளையும் பற்றி எச்சரிக்கின்றது (கொலோ.2:21). அதே நேரத்தில், வேற்றுமையான உபசேதங்களைப் போதியாதபடிக்கு உன்னை எபேசு பட்டணத்திலிருக்க வேண்டிக் கொண்டபடியே செய்வாயாக என்று தீமோத்தேயுவுக்கு பவுல் கட்டளையிட்டார் (1தீமோ.1:3-4).

இறுதியாக, டாக்டர் லொரையின் போட்னர் என்பவர் இப்படியாக கூறினார்."எந்த ஒரு மதத்தின் ஒழுங்கமைப்பிலும் உபதேசம் என்பது அடிப்படையானதாகவும், மிக முக்கியமானதாகவும் இருக்கிறது. ஏனென்றால்; தாங்கள் எதை நம்புகிறார்களோ அதை அவர்கள் செய்கிறார்கள். புதிய ஏற்பாட்டு உபதேசங்களுக்கு ஏற்றவாறு ஒரே விசுவாச முறையும் அதை நடை முறைப்படுத்துவதுமாகும். (யூதா3; எபே.4:5) மேலும் நம்முடைய விசுவாசத்திற்கு வேத வாக்கியங்களெல்லாம் போதுமானதாயிருக்கிறது (2தீமோ.3:16,17). சபையின் ஒற்றுமைக்கு கிறிஸ்துவின் உபதேசம் முக்கியம்தான் என்று வலியுறுத்துகின்றேன் (2யோவா.9-11).

# இவன் யார்?

- S.V.Paulraj

1. மனதைக் குருடாக்குகிறான் - 2கொரி.4:4
2. களைகளை விதைக்கிறான் - மத்.13:25
3. விசுவாசியைப் புடைக்கிறான் - லூக்.22:31
4. சிங்கம்போல் சுற்றித்திரிகிறான் - 1பேது.5:8
5. கண்ணிவைக்கிறான் - 1தீமோ.3:7
6. மாம்சத்தை அழிக்கிறான் - யோபு 2:7
7. மனதை கிறிஸ்துவை விட்டுப்பிரிக்கிறான் - 2கொரி.3:1-3
8. குட்டுகிறான் - 2கொரி.12:7
9. சகோதரருக்குள் விரோதம் - நீதி.6:19
10. சகோதரர்மேல் குற்றம் சாட்டுகிறான் - வெளி.12:10
11. பொய்யான அற்புதங்களை செய்வான் - 2தெச.2:9,10
12. அக்கினியாஸ்திரங்களை எய்கிறான் - எபே.6:16
13. புருஷனையும், மனைவியையும் பிரிக்கிறான் - 1கொரி.7:4,5
14. மோசம் போக்குகிறான் - வெளி.20:10
15. தேவ ஆலோசனையை எதிர்க்கவைப்பான் - 2சாமு.24:1
16. ஆவிக்குரிய ஐக்கியத்தை தடைசெய்வான் - 1கொரி.10:16
17. மனுஷரை வனாந்தரத்திற்கு இழுத்துச்செல்வான் - லூக்.8:29
18. வஸ்திரம் இல்லாமல் செய்வான் - லூக்.8:27
19. மனுஷரைக் கொல்ல தீயிலும் தண்ணீரிலும் தள்ளுகிறான் - மாற்.9:22
20. பரிசுத்த ஆவியிடம் பொய்பேசவைக்கிறான் - அப்.5:3
21. விசுவாசிகளை காவலில் போடுகிறான் - வெளி.2;10
22. ஒளியின் தூதன் வேஷத்தை தரிக்கிறான் - 2கொரி.11:14
23. வசனத்தை இருதயத்திலிருந்து எடுத்துப்போடுவான் - லூக்.8:12
24. சபைக்கு வராமல் ஒளிந்து கொள்ளவைப்பான் - ஆதி.3:10
25. தன் தவறை உணர விடமாட்டான் - ஆதி.3:12,13

**பிசாசானவன்**
**ஆதிமுதல்**
**பாவஞ்செய்கிறான்**
**1யோவான் 3:8**





அவருடைய தீர்மானமாகும். ஆண்களும், பெண்களும் பிரசங்கிப்பது என்பது போட்டிபோடுவது அழிவுக்குரியதாகும். உலகத்தில் ஆண்களும், பெண்களும் பலவிதமான வேலைக்கு போட்டி போடுவதினால் என்ன நடக்கிறது என்பதை நாம் அறிவோம். உண்மையாகவே அவர்கள் ஒருவரோடொருவர் பகைவர்களாகிறார்கள். இந்த விதமான நிலை கர்த்தருடைய சபையிலே இருக்கமுடியாது. ஏனென்றால் கர்த்தருடைய போதனைகளை அலட்சியம் செய்பவர்கள் நிராகரிக்கப்படுவார்கள். இந்த விதமான சூழ்நிலையில் என்னத்தை நாம் சாதிக்கமுடியும்?

2. ஓரினச்சேர்க்கையில் உள்ளவர்கள் பிரசங்கியாராக முடியாது. உண்மையாகவே சில மத குழுக்களில் நிர்பந்தம் காரணமாக இப்படிப்பட்டவர்களை பிரசங்கியாராக ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள் அவர்கள் சாதித்தது என்ன? ஓரினச் சேர்க்கை ஒரு ஒழுக்கக்கேடான செயல். வேதம் அதை கண்டனம்பண்ணுகிறது. அது இயல்பானதோ அல்லது இயற்கையானதோ கிடையாது. ரோமருக்கு எழுதும் போது பவுல் இந்த விதமான மக்களைக் குறித்து பின்வருமாறு விவரிக்கிறார் “இதினிமித்தம் அவர்கள் தங்கள் இருதயத்தில் உள்ள இச்சையினாலே ஒருவரோடொருவர் தங்கள் சரீரங்களை அவமானப்படுத்தத்தக்கதாக தேவன் அவர்களை அசுத்தத்திற்கு ஒப்புக்கொடுத்தார். தேவனுடைய சத்தியத்தை அவர்கள் பொய்யாக மாற்றி என்றென்றைக்கும் ஸ்தோத்திரிக்கப்பட்டவராகிய சிருஷ்டிகரைத் தொழுது சேவியாமல் சிருஷ்டியைத் தொழுது சேவித்தார்கள். இதினிமித்தம் தேவன் அவர்களை இழிவான இச்சைரோகங்களுக்கு ஒப்புக்கொடுத்தார்; அந்தப்படியே அவர்களுடைய பெண்கள் சுபாவ அநுபோகத்தைச் சுபாவத்திற்கு விரோதமான அநுபோகமாக மாற்றினார்கள். அப்படியே ஆண்களும் பெண்களைச் சுபாவப்படி அநுபவியாமல், ஒருவர் மேலொருவர் விரகதாபத்தினாலே பொங்கி ஆணோடே ஆண் அவலட்சணமானதை நடப்பித்து தங்கள் தப்பிதத்திற்குத் தகுதியான பலனைத் தங்களுக்குள் அடைந்தார்கள். தேவனை அறியும் அறிவைப்பற்றிக் கொண்டிருக்க மனதில்லாதிருந்தபடியால், தகாதவைகளைச் செய்யும்படி, தேவன் அவர்களை கேடான சிந்தைக்கு ஒப்புக்கொடுத்தார். அவர்கள் சகல வித அநியாயத்தினாலும், வேசித்தனத்தினாலும், துரோகத்தினாலும், பொருளாசையினாலும், குரோதத்தினாலும் நிறையப்பட்டு; பொறாமையினாலும், கொலையினாலும், வாக்குவாதத்தினாலும், வஞ்சகத்தினாலும், வன்மத்தினாலும் நிறைந்தவர்களுமாய், புறங்கூறுகிறவர்களுமாய், அவதூறுபண்ணுகிறவர்களுமாய், தேவபகைஞருமாய், துராகிருதம் பண்ணுகிறவர்களுமாய், அகந்தையுள்ளவர்களுமாய், வீம்புக்காரருமாய், பொல்லாதவைகளை யோசித்து பிணைக்கிறவர்களுமாய், பெற்றாருக்கு கீழ்ப்படியாதவர்களுமாய், உணர்வில்லாதவர்களுமாய், உடன்படிக் கைகளை மீறுகிறவர்களுமாய், சுபாவஅன்பில்லாதவர்களுமாய், இணங்காதவர்களுமாய், இரக்கமில்லாதவர்களுமாய் இருக்கிறார்கள். இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் மரணத்திற்குப் பாத்திராயிருக் கிறார்கள் என்று தேவன் தீர்மானித்த நீதியான தீர்ப்பை அவர்கள் அறிந்திருந்தும் அவைகளை தாங்களே செய்கிறதுமல்லாமல், அவைகளைச் செய்கிற மற்றவர்களிடத்தில் பிரியப்படுகிறவர் களுமாயிருக்கிறார்கள்” (ரோமர் 1:24-32). இப்படிப்பட்ட

பின்னணியுள்ளவர்கள் எப்படி பிரசங்கியாராக வேண்டுமென்று விரும்புகிறார்கள் என்பதை எப்படிக் கற்பனை செய்யமுடியும்? முதலாவது அவர்கள் எதை பிரசங்கிக்கக்கூடும்? அவர்கள் மனந்திரும்ப வேண்டும். ஆனால் அது மட்டும் போதாது அந்த நாட்களில் சோதோமில் இந்த விதமான மக்கள் வாழ்ந்தார்கள் அவர்கள் பொல்லாங்கினிமித்தமும் சோதோமின் பாவத்தினாலும் ஓரினச்சேர்க்கை மற்றும் ஒழுக்க கேட்டினாலும் தேவன் அவர்களை அழித்தார். இந்த விதமான பாவங்கள் அந்த காலகட்டத்திலிருந்து இப்போதும் இருக்கிறது (ஆதி. 18 -19 அதிகாரம்). பெண் தன்மையுள்ளவர்களும், மற்ற மனிதர்களோடு தங்களை கெடுத்துக்கொள்கிறவரும் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க முடியாது என்று பவுல் (1கொரி. 6:9-10). வசனங்களில் குறிப்பிடுகிறார். இங்கே அவர் யாரைக் குறித்து பேசுகிறார் என்பதில் சந்தேகம் இருக்க முடியுமா? ஆண் புணர்ச்சிகாரன் எதை பிரசங்கிப்பான் என்பதைக்குறித்து நீங்கள் எப்போதாவது ஆச்சரியப்பட்டது உண்டா?

3. ஒழுக்ககேடுடையவர்கள் பிரசங்கியாராக முடியாது. ஓரினச்சேர்கையாரைப்போலவே வேசித்தனம் விபசாரம் போன்ற மற்ற பாலியல் சீர்கேடுகளை வேத வசனம் கண்டனம் செய்கிறது. அவைகளெல்லாம் மாம்சத்தின் கிரியைகள் என்றும் அவைகளிலிருந்து உடனடியாக மனந்திரும்ப வேண்டும் என்றும் வேதம் கட்டளையிடுகின்றது (கலா 5:19-21). விவாகரத்தாகி மறுமணம் செய்தவர்கள் பிரசங்கியாராக கூடாது. ஒருவர் பிரசங்கியான பின்பு இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை ஏற்பட்டால் அவர்கள் தொடர்ந்து பிரசங்கம் செய்யாதிருப்பது நல்லது. ஒரு வேளை அவர் குற்றமில்லாதவராக இருந்தாலும் அல்லது வேதவசனத்தின்படி தங்கள் ஜீவியத்தை திருத்தியிருந்தாலும்கூட அவர்கள் தொடர்ந்து பிரசங் கியாதிருப்பது நல்லது. ஏனென்றால் நடந்தயாவும் ஊழியப்பாதையிலே தடைக்கற்களாக நிற்கும். அப்படியென்றால் வேறு என்ன செய்வது? ஒரு விசுவாசமுள்ள கிறிஸ்தவராக தொடர்ந்து ஜீவியுங்கள்.

4. உண்மையற்ற கிறிஸ்தவர்கள் பிரசங்கிக்கக் கூடாது. சபையிலிருந்து வேத வசனங்களின்படி விலக்கப்பட்டியிருந்தாலும் அவர்கள் பிரசங்கிக்கக் கூடாது. பிரசங்கிப்பது என்பது ஒருவர் கர்த்தருக்கு உண்மையாய் இருந்து அவர் போதிக்கிறபடி நடக்கிறவராக இருக்க வேண்டும். அவன் தன்னுடைய சொந்த ஜீவியத்தை திருத்திக்கொள்ளாவிட்டால் மற்றவர்களுக்கு எப்படி உதவி செய்ய முடியும்.

5. கள்ளப்போதகர்கள் தேவைப்படாதவர்கள். சில காலம் உண்மையுள்ள பிரசங்கியாராக இருந்து பின்பு வஞ்சிக்கப்பட்டு தவறான போதனைகளை பிரசங்கிக்க ஆரம்பித்தால் அவர்கள் பிரசங்கிக்க கூடாது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் அவர்கள் சத்தியத்தைத் தொடர்ந்து போதிக்காத காரணத்தால் சீர்ப்படுத்தபடவேண்டும். தவறுகளை போதிப்பதன் மூலம் அவர்களை வஞ்சித்து இரட்சிக்கப்படாத நிலையிலேயே இருக்கச் செய்வார்கள் (2யோவான் 9-11;ரோமர் 16:17-18).

6. வாடகைப்பிரசங்கியார் தேவைப்படாதவர்கள். அவர்கள் கர்த்தருக்கு என்று ஊழியம் செய்யாமல் தங்களுக்காகவே ஊழியம் செய்கிறார்கள். அவர்கள்



பிறந்தார், அவருடைய பிறந்தநாளைத் தான் நினைவுகூருதலாகக் கொண்டாடினோம். தேவகுமாரனின் பிறந்த நாளை கொண்டாட வேண்டியது அவசியமல்லவா! என்று கூறலாம். கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்னும் இரட்சகர் உலகத்தின் பாவங்களை சுமந்து தீர்க்கும்படி, அதாவது உலகத்தை பாவத்திலிருந்து மீட்கும்படி பிறந்தார் என்பது உண்மையிலும் உண்மை. ஆனால் அவர் தம்முடைய பிறந்த தினத்தை நினைவுகூருங்கள் என்றோ, பண்டிகையாக ஆசரியுங்கள் என்றோ கட்டளையிடவில்லை மாறாக அவருடைய மரணத்தை நினைவுகூரும்படி கூறினார். ''நான் உங்களுக்கு ஒப்புவித்ததைக் கர்த்தரிடத்தில் பெற்றுக்கொண்டேன்; என்னவெனில், கர்த்தராகிய இயேசு தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, அதைப்பிட்டு: நீங்கள் வாங்கிப்புசிங்கள், இது உங்களுக்காகப் பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார்... இந்தப் பாத்திரம் என் இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது; நீங்கள் பானம்பண்ணும்போதெல்லாம் என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார்'' (1கொ.11:23-26). இதையே பண்டிகை என்று 1கொ.5:8-ல் வாசிக்கிறோம். இந்த பண்டிகையை வாரத்தின் முதல்நாள்தோறும் ஆசரிக்க வேண்டியவர்களாயிருக்கிறோம். இதில் தேவன் பிரியமாயிருக்கிறார்.

பவுல் அவர்களில் சிலர் விக்கிரகாராதனைக்காரர் ஆனது போல நீங்களும் ஆகாதிருங்கள் என்றார். அன்பு சகோதரிகளே, இப்புத்தாண்டில் ஓர் தீர்மானம் பண்ணுங்கள். உங்களில் ஏதேனும் விக்கிரகம் காணப்படுகிறதா என்று சிந்தியுங்கள். ஆதியிலிருந்தே தேவன் விக்கிராராதனையை வெறுக்கிறார். நமக்கு பொருட்களின் மேல் ஆசை இருக்குமானால் அதுவும் விக்கிரகாராதனை தான், உறவுகளின் மேல் அதாவது தேவனிடத்தில் காட்டும் அன்புக்கு மேல், ஆசை, அன்பு இருக்குமானால் அதுவும் விக்கிரகாராதனையாக மாறிவிடும். அநேகர் தங்களுக்கு அன்பானவர்களை தெய்வமாக எண்ணி வணங்குவதை நாம் அறிவோம். ஆக, இதுவும் ஒரு வகையான விக்கிரகாராதனை தான். இஸ்ரவேல் ஜனங்கள் விக்கிரகாராதனை செய்ததினிமித்தமே தேவன் அவர்களிடத்தில் பிரியமா யிருந்ததில்லை. ஆதலால் வனாந்தரத்திலே அவர்கள் அழிக்கப்பட்டார்கள்.

அன்பானவர்களே, நாம் சிந்திபோம், நம் குடும்பத்தாரையும் சிந்திக்கவைப்போம். அன்று ஞானஸ்நானம் பெற்று ஒரே ஞானபோஜனத்தைப் புசித்த தேவ ஜனங்கள் மேல் தேவன் பிரியமில்லாதிருந்தார். அவர்கள் அழிக்கப்பட்டார்கள். நம்முடைய நிலை எவ்வாறு உள்ளது? நாம் ஒருவேளை ஞானஸ்நானம் பெற்றவர்களாய் ஒரே ஞான போஜனத்தைப் புசித்து, கன்மலை (கிறிஸ்து) தண்ணீரை பருகி கிறிஸ்தவர்களாக பக்தியுடன் தான் இருக்கிறோம் என்று மெத்தனமாக இருக்கலாம். அந்த இஸ்ரவேல் ஜனங்களைப் போல புசிப்போம், குடிப்போம், உட்கார்ந்து விளையாடுவோம் என்று சொல்லி பண்டிகைக் கிறிஸ்தவர் களாய் இருக்கலாம். அன்பு சகோதரிகளே, ஒருவரையும் குற்றப்படுத்தும்படி இதைக் கூறவில்லை. எங்கே அவர்களிடம் பிரியமில்லாதிருந்ததைப் போல, நம்மிடத்திலும் பிரியமில்லாதவராய் போய்விடுவாரே என்று பயமடைந்தவளாய் பாரத்தோடு எழுதுகிறேன். எனவே புத்தியுள்ள ஸ்திரீகளாக இருந்து இப்புத்தாண்டிலிருந்து கர்த்தருக்கு பிரியமானது இன்னதென்று அறிந்து நாமும் நம்மையும் நம் குடும்பத்தையும் அழிவுக்குத் தப்புவித்துக்கொள்ளும் காரியங் களையே சிந்தித்து செயல்படுவோம். கர்த்தர் தாமே உங்கள் இருதயங்களைத் திறப்பாராக!

# விக்கிரகாராதனைக்காரர் ஆகாதிருங்கள்

## Do Not Become Idolaters

*- Glory Arjunan*

அன்பு சகோதரிகளே, உங்கள் யாவருக்கும் எனது மனங்கனிந்த புத்தாண்டு வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்ளுவதோடு, இப்புத்தாண்டிலே சிந்தனைக் கென்று சில காரியங்களையும் உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

கிறிஸ்தவர்களென அழைத்துக் கொள்ளுகிற நீங்கள் ஒரு விக்கிரகாராதனைக்காரா? இல்லை என்று தானே சொல்கிறீர்கள். நல்லது. ஆனால் ஆவியானவர் சொல்லும்போது, மோசேக்குள்ளாக மேகத்தினாலும் சமுத்திரத்தினாலும் ஞானஸ்நானம்பண்ணப்பட்டு, ஒரே ஞானபோஜனத்தைப் புசித்து, ஒரே ஞானபானத்தைக் குடித்து, கன்மலை கிறிஸ்துவின் ஜீவத்தண்ணீரைக் குடித்த இஸ்ரவேல் ஜனங்களை திருஷ்டாந்தமாக வைத்து நம்மை எச்சரிக்கிறதை 1கொ.10:2-12-ல் காணலாம். அவர்கள் ஜீவனுள்ள தேவனை தெய்வமாகக் கொண்டிருந்தவர்கள். "...அவர்களில் அதிகமானபேர்களிடத்தில் தேவன் பிரியமாயிருந்ததில்லை;..." (1கொ.10:5) என வாசிக்கிறோம். தம்முடைய சொந்த ஜனத்தினிடத்தில் தேவன் பிரியமில்லாதிருந்ததற்குக் காரணமென்ன? "ஜனங்கள் எல்லாரும் தங்கள் காதுகளில் இருந்த பொன்னணிகளைக் கழற்றி, ஆரோனிடத்தில் கொண்டு வந்தார்கள். அவர்கள் கையிலிருந்து அவன் அந்தப் பொன்னை வாங்கி, சிற்பக் கருவியினால் கருப்பிடித்து, ஒரு கன்றுக்குட்டியை வார்ப்பித்தான், அப்பொழுது அவர்கள்: இஸ்ரவேலரே, உங்களை எகிப்துதேசத்திலிருந்து அழைத்துக் கொண்டுவந்த உங்கள் தெய்வங்கள் இவைகளே என்றார்கள். ஆரோன் அதைப் பார்த்து, அதற்கு முன்பாக ஒரு பலிபீடத்தைக் கட்டி, நளைக்குக் கர்த்தருக்குப் பண்டிகை என்று கூறினான். மறுநாள் அவர்கள் அதிகாலையில் எழுந்து, சர்வாங்க தகனபலிகளையிட்டு, சமாதானபலிகளைச் செலுத்தினார்கள்; பின்பு, ஜனங்கள் புசிக்கவும் குடிக்கவும் உட்கார்ந்து, விளையாட எழுந்தார்கள்" (யாத்.32:3-6). இதே வசனத்தையே பவுல் கொரிந்து சபைக்கு, "ஜனங்கள் புசிக்கவும் குடிக்கவும் உட்கார்ந்து விளையாட எழுந்திருந்தார்கள் என்று எழுதியிருக்கிறபடி, அவர்களில் சிலர் விக்கிரகாராதனைக்காரர் ஆனது போல நீங்களும் ஆகாதிருங்கள் (1கொரி.10:7) என்று எச்சரிக்கிறார்.

அன்பு சகோதரிகளே, யாத்.32:3-6 மற்றும் 1கொ.10:7-ல் குறிப்பிடப்பட்டுள்ள வசனங்களை நிதானமாக வாசியுங்கள், அதன்பின்பு இவ்வசனங்களுக்கும் நமக்கும் ஏதேனும் சம்பந்தமிருக்கிறதா என்று சிந்தியுங்கள். அன்று அவர்கள் பொன்னினால் கன்று குட்டியைசெய்து வழிபட்டார்கள். இன்று நீங்கள் இயேசுவுக்கு ஒரு சொரூபத்தையோ அல்லது ஒரு குடிலை ஏற்படுத்தி அதில் மரியாள், யோசேப்பு, ஆடு, மாடுகள், சாஸ்திரிகள் போன்றவர்களின் பொம்மைகளை வைத்து பண்டிகை ஒன்றை ஆசரித்து அவைகளுக்கு முன் மண்டியிட்டு பணிந்து கொள்ளுகிறதில்லையா? பின்பு புசிப்போம், குடிப்போம், விளையாடுவோம் என்று கூறி ஆர்ப்பரிக்கவில்லையா? இல்லையென்று கூறுவீர்களென்றால் கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

இயேசு கிறிஸ்து பாவிகளை இரட்சிக்க இவ்வுலகத்தில் மானிடனாய்



எதைப்பிரசங்கிக்க வேண்டுமென்று பணம் கொடுக்கிறீர்களோ அதையெல்லாம் பிரசங்கிப்பார்கள் கர்த்தர் தாமே இதைக்கண்டனம் செய்கிறார் (யோவான் 10:11-13).

7. இந்த உலகத்தையும் பணத்தையும் நேசிக்கிறவர்கள் பிரசங்கியாராகத்தேவைப்படாதவர்கள். உலகத்திலே மிகவும் ஈடுபாடு உள்ள சிலர் உண்மையற்றவர்களாகி கேள்விக்குரியவைகளைச் செய்கிறார்கள். அவர்கள் தொடர்ந்து அதிக பணத்தைப் பெறும்படியும் வாழ்க்கையின் சரீரத் தேவைகளை அதிகமதிகமாகப் பெறும்படியும் பிரயாசப்படுகிறார்கள். உலகத்தையும் அதில் உள்ளவைகளையும் நேசித்து அவைகளுக்கு வாழ்வில் முதலிடம் கொடுக்கக் கூடாது என்று (1யோவான் 2:15-16) காண்கிறோம். பண ஆசை எல்லாத்தீமைக்கும் வேராயிருக்கிறது என்று பவுல் அப்போஸ்தலன் 1தீமோத் 6:10-ல் கூறுகிறார். கர்த்தரையும் அவருடைய ராஜ்யத்தையும் முதலாவது தேடவேண்டும் என்று மத் 6:33-ல் சொல்லப்படுகிறது.

நமக்கு பிரசங்கியார்கள் தேவை அதிகம் தேவை ஆனால் அவர்கள் உண்மையாய் மனமாற்றப்பட்டு தங்களை அர்பணித்தவர்களாய் தேவனிடத்தில் விசுவாசமுள்ளவர்களாய் கர்த்தருக்கும் அவருடைய வேலைகளை செய்வதற்கும் பிரியமுள்ளவராக இருந்து, அப்படியாக கிறிஸ்துவுக்காக கடினமாக உழைத்து பிரசங்கிக்க வேண்டும்.

நீங்கள் பிரசங்கியாராக விரும்புகிறீர்களா? அப்படியென்றால் அதற்குரிய விலையைக் (தியாகம்செய்ய) கொடுக்க தயாரா?

*கிறிஸ்துவின் வசன மாத இதழ் மற்றும் அதன் மூலமாக நடத்தப்படும் அனைத்து கர்த்தருடைய பணிக்கும் உதவக்கூடிய கர்த்தருடைய சபைகளையும், கர்த்தருடைய மக்களையும் வரவேற்கிறோம்.*

*உங்களுடைய உதவிகளை வங்கி காசோலை மூலமாகவோ அல்லது மணியாடர் மூலமாகவோ* **THE WORD OF CHRIST** *என்ற பெயரில் அனுப்பிவையுங்கள்.*

*நன்றி. –* ***ஆசிரியர்***

**Editor, THE WORD OF CHRIST, P.O.Box 5, BATLAGUNDU - 624 202**

**ஜெபியுங்கள்**

- இவ்விதழின் வாசகர்களுக்காக...
- சென்ற மாதம் கிடைக்கப்பெற்ற புதிய ஆத்துமாக்களுக்காக...
- வேன் ஊழியத்திற்காக...
- மாவட்டங்கள் தோறும் நடைபெற்று வரும் ஊழியங்களுக்காக...
- வானொலி மற்றும் தொலைகாட்சி ஊழியங்களுக்காக...



தேவ செய்திகள் அடங்கிய CD & DVD எங்களிடம் உள்ளது ரூ.100/- அனுப்பி பெற்றுக்கொள்ளுங்கள் உங்கள் முகவரி மற்றும் மொபைல் எண்ணை SMS பண்ணவும். **9443558041**




பெண்கள் பகுதி

## தேவனிடத்திற்குச் செல்லும் வழியை மனிதன் கண்டு பிடிக்க முடியுமா?

## Can Man Find the Way to God?

*-Betty*

### பாடம் -4 உலகளாவிய ஜலப்பிரளயம்






மிகவும் தொன்மையான பதிவுகள் மூலமாக ஒரு உலகளாவிய ஜலப்பிரளயத்தை குறித்து நமக்கு 500க்கும் அதிகமான குறிப்புகளும் கிடைத்திருக்கின்றன (எச்.எஸ்.பெல்லாமி) "கடந்த காலத்தில் இருந்ததே தற்காலத்திலும் காணப்படுகிறது" என்று நினைக்க விரும்புகிற பரிணாம கொள்கையாளர்களுக்கு எதிராக இது இருக்கிறது. அது திடீரென்று ஏற்படக்கூடிய வழக்கமான ஒரு பேரழிவாக அது இருக்கவில்லை, பூமியின் மேற்பரப்பு முழுவதுமாக ஜலத்தினால் மூடப்பட்டிருந்ததே இதற்கு எதிரிடையான நிரூபணமாக இருக்கிறது.

பாபிலோன் தேசத்து ஜலப்பிரளய கதைகள் கில் காமேஷ் இதிகாசம் ஏறத்தாழ கி.மு. 2000 ஆண்டில் எழுதப்பட்டதாயிருந்தது. அதிலே சுமேரிய மொழிபெயர்ப்பு ஒன்றும், ஸெமிட்டிக் மொழிபெயர்ப்பு ஒன்றும் இருக்கிறது. இ.எ.வாலஸ் பட்ஜ் என்பவர் தன்னுடைய பாடத்திற்கு "ஜலப்பிரளயம் மற்றும் கில்காமேஷ் இதிகாசம் குறித்த பாபிலோனியர்களின் விபரம்" என்ற தலைப்பை அளித்தார். சுமேரியர்கள் மற்றும் செமிட்டியர்கள் தங்களுடைய சுயமான வழியிலே இணையற்ற முக்கியத்துவம் வாய்ந்த மிகவும் பெரிய பேரழிவை ஞாபகர்த்தம் ஏற்படுத்துவது சாத்தியமான காரியமாக இருக்கிறது. இவ்விரு ஜனங்களுக்கும் பாரம்பரியத்தின் மூலமாக அதைக் குறித்த அறிவு பொதுவானதாக இருக்கிறது. அது என்னவென்றால்; நன்கு அறியப்பட்ட எல்லா சம்பவங்களிலும், ஜலப்பிரளயத்தை சுமேரியர்கள் ஒரு வரலாற்று சம்பவமாக குறிப்பிட்டிருந்தனர், ஜலப்பிரளத்திற்கு முன்பு ஆளுகை செய்த இராஜாக்களின் பட்டியல் பற்றிய குறிப்புகளுக்காக நடைமுறையில் காலத்தை குறிப்பிட முடிந்தது. இருந்தபோதிலும் அவர்களுடைய ஆளுகை பற்றி குறிப்பிட்டிருந்த நெடுங்காலம் நம்ப முடியாத ஒன்றாக இருக்கிறது என்பதும் ஒத்துக் கொள்ளப்படவேண்டிய காரியமாக இருக்கிறது. (இத்தகைய நம்ப முடியாத ஜலப்பிரளயத்துக்கு முன்பு இராஜாக்களின் நீண்ட ஆளுகை அதே சமயத்தில் ஆதியாகமம் புத்தகத்தில் காணப்படும் நீண்ட காலத்துக்கு ஒத்தகருத்து உடையதாக இருக்கிறது).

பெரோசஸ் என்பவருடைய கருத்தின்படி ஜலப்பிரளத்தை குறித்து ஒரு பதக்கத்தில் பொறிக்கப்பட்டுள்ள விஷயம்

அராதாத்ஸின் மரணத்திதுக்கு பின்பு அவனுடைய க்சிசுத்ரஸ் என்ற குமாரன் 18 வருஷங்கள் ஆளுகை செய்தான். இவனுடைய காலத்தில்தான் ஒரு



பெரும் ஜலப்பிரளயம் நிகழ்ந்தது; இந்த வரலாறு இவ்விதமாக விவரிக்கப்படுகிறது. ஒரு தரிசனத்தில் கரோனஸ் என்ற தெய்வம் அவனுக்கு காட்சியளித்தது. அது டீஸிஸஸ் மாதம் 15-ம் தேதியிலே ஒரு ஜலப்பிரளயம் தோன்றி அது மனுஷ இனத்தை அழிக்கும் என்று எச்சரித்தது. எனவே டீஸியஸ் சகலகாரியங்களின் தொடக்கம், விவரம் முடிவு இவற்றை எழுதும்படி டீஸியஸ் க்சிசுத்ஸீக்கு கட்டளையிட்டார். மேலும் அவ்வாறு எழுதப்பட்ட செய்தியை சிப்பாராவில் உள்ள சூரியனின் நகரத்தில் புதைத்து விடும் படியாகவும் கட்டளையிட்டார். அத்துடன் ஒரு கப்பலை கட்டி அதற்குள் தன்னுடைய சிநேகிதரையும், உறவினர்களையும் சேர்த்துக் கொண்டான். அனைவரும் உயிர்வாழ்வதற்கு தேவையான அனைத்தையும் வித்தியாசமான பிராணிகளையும் தன்னுடன் நான்கு கால் பிராணிகளையும் தன்னுடன் சேர்த்துக் கொள்ளவும், ஆழத்துக்கு பயப்படாமல் தன்மேல் நம்பிக்கையாயிருக்கவும் கட்டளை இட்டார்.

"அவர் கடவுளிடம் கேட்டார், தான் கப்பலை செலுத்த வேண்டுமா? என்று, ஆம் தேவர்களிடமாக கப்பலை செலுத்த வேண்டும் என்று பதிலளிக்கப்பட்டது. அதன் காரணமாக மனித இனத்தின் நன்மைக்காக ஒரு வேண்டுதல் செய்தான் அதன்பின் அவன் தெய்வீகமாக கீழ்ப்படிந்தான்; அவன் 5 விளையாட்டரங்கத்தின் அளவு நீளம் கொண்டதும், 2 விளையாட்டரங்கத்தின் அளவு அகலம் கொண்டதுமான ஒரு கப்பலை கட்டினான். அதற்குள்ளாக அவன் ஆயத்தம் செய்த சகலத்தையும் வைத்தான்; இறுதியாக இவையனைத்தையும் அவன் தன் மனைவி, பிள்ளைகள், சிநேகிதரிடமும் தெரிவித்தான்.

பூமியிலே ஜலப்பிரளயம் ஏற்பட்ட பின்பு ஏற்ற நேரத்தில் காற்று வீசியது. க்சிசுத்ரஸ் கப்பலில் இருந்து பறவைகளை பறக்கவிட்டான், அவைகள் எந்த இரையையும், கால்களை வைத்து இளைப்பாற எந்த இடத்தையும் காணாமல் அவனிடமாய் மீண்டும் திரும்பின. சில நாட்கள் இடைவெளி விட்டு பின்பு அவைகளை இரண்டாம் முறையாக அனுப்பினான் இப்பொழுதோ அவைகள் தங்களுடைய கால்களில் லேசான சேறுடன் திரும்பின மூன்றாம் முறையாக அவன் இந்த பறவைகளை பரீட்சார்த்தமாக வெளியே அனுப்பினான்; ஆனால் அவைகளோ மீண்டும் அவனிடம் திரும்பி வரவே இல்லை. அப்பொழுதில் இருந்து ஜலங்களுக்கு மேலாக பூமியின் மேற்பரப்பு காணப்பட்டது என்ற முடிவுக்கு அவன் வந்தான். ஆகையால் அவன் கப்பலிலே ஒரு துவாரத்தை உண்டாக்கி அதன் வழியாக வெளியே பார்த்த பொழுது ஏதோ ஒரு மலையின் அருகே ஒரு மணற்பாங்கான ஏரிக்கரையை கண்டான். உடனே அவன் அங்கே தன் மனைவி பிள்ளைகள், கப்பலோட்டியுடனே கப்பலை நிறுத்தினான். க்சிசுத்ரஸ் இதற்கு பின்பு அவன் பூமிக்கு தன் தொழுகையை செலுத்தினான். கப்பலில் இருந்த தன்னோடே சேர்ந்து வந்தவர்களுடனே தேவர்களுக்கு பலிகளை செலுத்தினான். மறைந்து போனான்"

**கயிச் மாயர்களின் போப்புல் ஊ என்ற நூலில் இருந்த குறிப்பிடப்பட்டது**

97. ஏதோ ஒன்று முதலில் தோன்றிய உடனே வானத்தில் பிரகாசித்தது.

98. வானத்தின் அஸ்திபாரத்திலிருந்து ஒரு கரிய மேகம் மேலெழுப்பியது.

99. அதனுள்ளே ஆதாத் கடவுள் பெருஞ்சத்தமிட்டார்

100. நாபு மற்றும் ஷாரு தேவர்கள் (அதாவது மார்துக்) முன் சென்றார்கள்.

**-தொடரும்**